**ஏப்ரல் – 26**

# தமிழ்நாடு செய்திகள்

## அர்ஜீன் கல்யாண் – 68வது இந்திய கிராண்ட்மாஸ்டர்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த அர்ஜுன் கல்யாண் இந்தியாவின் 68வது கிராண்ட் மாஸ்டர் ஆகியுள்ளார்.
- இவர் செர்பியாவில் நடைபெற்ற "ராபின் ருஜ்னா சோர் – 3" என்ற கிராண்ட் மாஸ்டர் தகுதிக்கான 5வது சுற்றில் டிராகன் கோசிக் என்பவரை வீழ்த்தி 2500 ELO (Chess rating) வரம்பினை கடந்து இப்பட்டத்தை வென்று உள்ளார்.
- IM சரவணன் மற்றும் ஒரு உக்ரேனிய கிராண்ட் மாஸ்டரான அலெக்சாண்டர் கோலோஷ்சாப்போவ் ஆகியோரிடம் அர்ஜுன் பயிற்சி பெற்றார்.
- இவர் தனது 9வது வயதில் சதுரங்கம் விளையாடத் தொடங்கி அடுத்த ஒரு வருடத்தில் FIDE (International Chess Federation) தர வரிசையில் இடம் பெற்றார்.
- விஸ்வநாதன் ஆனந்த் 1988 ஆம் ஆண்டில் நாட்டின் முதல் கிராண்ட் மாஸ்டர் ஆகினார்.



# தேசியச் செய்திகள்

## OPCW அமைப்பின் வெளியுறவுத் தணிக்கையாளர்

- இந்தியாவின் தலைமை கணக்குத் தணிக்கையாளர் கிரிஷ் சந்திர முர்மூ, (CAG – Comptroller Auditor General) இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான அமைப்பின் (Organisation for the Prohibition of Chemical Weapons – OPCW) வெளியுறவுத் தணிக்கையாளராக 2021 ஆம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு பொறுப்பு ஏற்று உள்ளார்.
- இந்த நியமனமானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 21 அன்று நடைபெற்ற OPCW அமைப்பின் அரசுகளின் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தேர்தல் முறைபாடுகளின் போது மேற்கொள்ளப்பட்டது.
- மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு OPCW அமைப்பின் நிர்வாக சபையின் ஒரு உறுப்பினராக ஆசியப் பகுதியினைப் பிரதிநிதித்துவப் படுத்தச் செய்ய இந்தியா தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

- OPCW என்பது இரசாயன ஆயுதங்கள் மீதான உடன்படிக்கையை அமல்படுத்தும் ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும்.
- இது 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் 29 அன்று நடைமுறைக்கு வந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## ஆஸ்திரேலியா-இந்தியா இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பு

- ஆஸ்திரேலிய நாடானது இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பின் கீழ் ரூ. 81.2 மில்லியன் (1.4 மில்லியன் ஆஸ்திரேலிய டாலர்) தொகையினை வழங்குவதாக அறிவித்துள்ளது.
- இந்தோ-பசிபிக் பெருங்கடல் முன்னெடுப்பானது (Indo – Pacific Oceans Initiative – IPOI) 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் நடைபெற்ற கிழக்காசிய உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியால் முன்மொழியப்பட்டது.
- கடல்சார் எல்லைகளை வலுப்படுத்துவதே இம்முன்னெடுப்பின் முக்கிய நோக்கம் ஆகும்.

### *கூட்டாண்மை பற்றிய தகவல்கள்*

- இந்த முன்னெடுப்பு ஒரு சுதந்திரமான மற்றும் அனைவருக்குமான வளமான ஒரு இந்தோ-பசிபிக் பகுதியை உருவாக்க ஆதரவு வழங்கும்.
- இதில் உதவித் தொகையைப் பெற விண்ணப்பிப்பதற்கு ஒரு நிறுவனம் (அ) அமைப்பானது இந்தியாவில் (அ) ஆஸ்திரேலியாவில் அமைந்திருப்பதோடு, அந்த நிறுவனம் இரு நாடுகளில் ஏதேனும் ஒன்றுடன் கூட்டாண்மை நிறுவனங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

# பொருளாதாரச் செய்திகள்

## 2021 ஆம் நிதி ஆண்டிற்கான வரி வசூலிப்பு

- நிதி அமைச்சகமானது 2020-21 ஆம் நிதி ஆண்டிற்கான வரி வசூல் கணக்குகளை சமீபத்தில் வெளியிட்டது.
- நிதி அமைச்சகத்தின் கூற்றுப் படி, 2020-21 ஆம் நிதி ஆண்டிற்கான நேரடி வரி வசூல் ரூ.9.45 லட்சம் கோடியாகும்.
- நேரடி வரி வசூலில் தனிநபர் வருமான வரி வசூல்களும் பெருநிறுவனம் மீதான வரி வசூல்களும் அடங்கும்.
- 2020-21 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட தனிநபர் வருமான வரியானது ரூ.4.88 லட்சம் கோடியாகும்.
- 2020-21 ஆம் ஆண்டில் வசூலிக்கப்பட்ட பெரு நிறுவனங்கள் மீதான வரியானது (அல்லது பெருநிறுவன வரி) ரூ.4.57 லட்சம் கோடியாகும்.
- 2020-21 ஆம் ஆண்டிற்கான மொத்த நேரடி வரி வசூலானது ரூ.12.06 லட்சம் கோடி ஆகும்.
- 2021 ஆம் நிதி ஆண்டின் வரி வசூலானது திருத்தியமைக்கப்பட்ட இலக்கினை 5% விஞ்சியுள்ளது.
- 2021 ஆம் நிதி ஆண்டின் வரி வசூல், அதற்கு முந்தைய நிதி ஆண்டின் வரி வசூலை விட 10% குறைவாகும்.

- 2020-21 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், இந்திய அரசு நேரடி வரிகளின் வாயிலாக ரூ.13.19 லட்சம் கோடி வசூலாகும் என கணித்திருந்தது.
- இருப்பினும், இது கோவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்பு கணிக்கப் பட்டது.
- பெருந்தொற்றுக்குப் பிறகு, இந்த மதிப்பீடானது ரூ.9.05 லட்சம் கோடியாக குறைக்கப் பட்டது.

## இந்தியாவில் அந்நிய தொகுப்பு முதலீடுகள்

- 2021 ஆம் ஆண்டில், இந்தியாவானது அந்நிய தொகுப்பு முதலீடுகளை அதிகம் பெறும் நாடாக உருவெடுத்துள்ளது.
- 2020-21 ஆம் நிதி ஆண்டில் பெற்ற நிகர அந்நிய தொகுப்பு முதலீடானது ரூ.2.74 லட்சம் கோடியாகும்.
- அந்நிய தொகுப்பு முதலீடு (Foreign Portfolio Investment – FPI) என்பது மற்ற நாடுகளின் முதலீட்டாளர்கள் நம் நாட்டில் பாதுகாப்புப் பத்திரங்கள் மற்றும் சொத்துகளை வாங்குவதாகும்.
- அந்நிய தொகுப்பு முதலீடு என்பது ஒரு நாட்டில் அமைந்துள்ள ஒரு தனிநபர் (அ) ஒரு நிறுவனமானது மற்றொரு நாட்டில் உள்ள ஒரு வணிகத்தில் முதலீடு செய்வதாகும்.
- தொகுப்பு முதலீடானது ஒரு குறுகிய கால நடவடிக்கையாகும் ஆனால் நேரடி முதலீடானது ஒரு நீண்ட கால நடவடிக்கையாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ரஷ்யாவின் விண்வெளி நிலையம்

- ரஷ்யா தனது சொந்த விண்வெளி நிலையம் ஒன்றினை அமைத்து 2030 ஆம் ஆண்டிற்குள் அதனை விண்வெளியின் சுற்றுப் பாதையில் நிலைநாட்டுவதற்கான பணிகளை தொடங்கியுள்ளது.
- சர்வதேச விண்வெளி நிலையத் திட்டத்திலிருந்து வெளியேறும் முடிவை ரஷ்யா ஆலோசித்து வருகிறது.
- அமெரிக்க நிறுவனமான ஸ்பேஸ் X நிறுவனத்தின் வெற்றிகரமான முதல் விண்வெளி திட்டத்திற்குப் பிறகு, கடந்த ஆண்டில் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு விண்வெளிக்கு மனிதனை அனுப்பும் தனது திட்டத்தின் முன்னுரிமையை ரஷ்யா இழந்து உள்ளது.

### *சர்வதேச விண்வெளி நிலையம்*

- இந்நிலையம் 1998 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இதில் ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் ஆகியவற்றின் ஈடுபாடும் அடங்கும்.
- சர்வதேச விண்வெளி நிலையமானது (International Space Station – ISS) புவியின் தாழ்மட்ட சுற்றுப் பாதையில் அமைந்த (low Earth orbit) ஒரு மாதிரி விண்வெளி நிலையமாகும் (செயற்கையாக வாழ்வதற்கான சூழ்நிலை ஏற்படுத்தப்பட்ட துணைக் கோள்).
- ISS ஆனது வான்-உயிரியல், வானியல், எரிகல் பற்றிய அறிவியல், இயற்பியல் மற்றும் இதர பிரிவுகளில் அறிவியல் குறித்த சோதனைகள் மேற்கொள்ளப் படுவதற்கான ஒரு விண்வெளி சூழல் சார்ந்த ஆய்வகமாக செயல்படுகிறது.
- ISS ஆனது புவியை 93 நிமிடங்களில் சுற்றி வந்து ஒரு நாளைக்கு 15.5 சுற்றுகளை

நிறைவு செய்கிறது.



## காஸ்மிக் ரோஸ்

- நாசா சமீபத்தில் "காஸ்மிக் ரோசின்" (அண்டங்களில் ரோஜா வடிவ அமைப்பு) புகைப்படத்தை வெளியிட்டது.
- காஸ்மிக் ரோஸ் என்பது நாசாவின் ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி எடுத்த ஒரு புகைப்படமாகும்.
- ArP 273 என்ற அண்டங்களின் ஊடாக ஏற்படும் இடைவினைகளை இப்படம் பிரதிபலிக்கிறது.



***ArP 273***

- இது ஆண்ட்ரோமேடா விண்மீன் தொகுப்பில் அமைந்துள்ளது.
- இது புவியிலிருந்து 300 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- இது UGC 1810 மற்றும் UGC 1813 ஆகிய சுருள் வடிவ அண்டங்களின் ஒரு தொகுப்பாகும்.
- UGC 1810 ஆனது UGC 1813 என்பதை விட 5 மடங்கு கனமானதாகும்.
- UGC 1810 அண்டமானது ரோஜா வடிவில் உருமாறிய ஒரு தட்டினைக் கொண்டுள்ளது.

- இச்சிதைவானது UGC 1813 அண்டத்தின் கீழமைந்த ஈர்ப்பு விசையின் காரணமாக ஏற்பட்டது.
- இது ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கியினால் புகைப்படமெடுக்கப் பட்டது.


# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## சங்கா கோஷ்

- புகழ்பெற்ற வங்க மொழிக் கவிஞரான சங்கா கோஷ் அவர்கள் சமீபத்தில் தமது 89வது வயதில் காலமானார்.
- இவர் ஞானபீட விருது மற்றும் சாகித்திய அகாதமி விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.
- இவர் 1977 ஆம் ஆண்டில் தனது ‘பாபர் எர் பிரார்த்தனா’ (Babar-er Prarthana) என்ற புத்தகத்திற்காக சாகித்திய அகாதமி விருதினைப் பெற்றார்.
- இவருக்கு 1999 ஆம் ஆண்டில் இரண்டாவது சாகித்திய அகாதமி விருது வழங்கப் பட்டது.
- 2011 ஆம் ஆண்டில் சங்கா கோஷிற்கு பத்மபூஷன் விருது வழங்கப் பட்டது.

# முக்கிய தினங்கள்

## உலக ஹோமியோபதி விழிப்புணர்வு வாரம்




- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 முதல் ஏப்ரல் 16 வரையிலான வாரம் உலக ஹோமியோபதி விழிப்புணர்வு வாரமாகும்.
- இது சாமுவேல் ஹென்மேன் பிறப்பினைக் கொண்டாடுவதற்காக கடைபிடிக்கப் படுகிறது.
- இவர் ஹோமியோபதியின் தந்தையாவார்.

## உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினம் – ஏப்ரல் 23

- உலக புத்தக தினம் யுனெஸ்கோவினால் கொண்டாடப்படுகிறது.
- ஏப்ரல் 23 ஆனது உலக இலக்கியத்திற்கான அடையாள தேதியாகும்.
- 1616 ஆம் ஆண்டில் இத்தினத்தில்தான் செர்வான்டிஸ், சேக்ஸ்பியர் மற்றும் இன்கா கார்சைலாசோ டிலா வேகா ஆகிய அனைவரும் உயிரிழந்தனர்.
- எனவே இந்த மகத்தான இலக்கிய அறிஞர்களுக்குக் கௌரவமளிக்கும் வகையில் இத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டது.
- ஜியார்ஜியாவின் தலைநகரமான திப்லிசி (Tbilisi) ஆனது 2021 ஆம் ஆண்டிற்கான உலக புத்தகத் தலைநகரமாக தேர்ந்தெடுக்கப்பட்டது.
- தற்போதைய பெருந்தொற்றினை நினைவில் வைத்து இந்த ஆண்டிற்கான உலக புத்தக தினத்தின் கருத்துருவாக “To Share a Story” என்ற வாக்கியம் இருக்கும்.
- இந்த ஆண்டு உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினத்தைக் கொண்டாடும் வகையில் யுனெஸ்கோவானது “Bookface” என்ற ஒரு சவாலை உருவாக்கியுள்ளது.

## ஆங்கில மொழி தினம் – ஏப்ரல் 23

- ஐ.நா.வால் அனுசரிக்கப்படும் இத்தினமானது வில்லியம் சேக்ஸ்பியரின் பிறந்த தினம் மற்றும் இறந்த தினமாக குறிக்கப் படுகிறது.
- இத்தினமானது ஐ.நாவின் ஆறு அலுவல் மொழிகளில் ஒவ்வொரு மொழிக்கும் மொழி அனுசரிப்பு தினங்களை உருவாக்குவதற்காக உலகளாவிய தகவல் தொடர்பு துறையின் 2010 ஆம் ஆண்டின் முன்னெடுப்பின் காரணமாக கடைபிடிக்க தொடங்கப் பட்டது.
- ஐ.நாவின் ஆறு அலுவல் மொழிகளின் மொழி தினங்கள் பின்வருமாறு
    - அரபு (டிசம்பர் 18)
    - சீனம் (ஏப்ரல் 20),
    - ஆங்கிலம் (ஏப்ரல் 23),
    - பிரஞ்சு (மார்ச் 20)
    - ரஷ்யம் (ஜுன் 06)
    - ஸ்பானியம் (ஏப்ரல் 23)

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★